வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திருமதி.செ.மணிமொழி M.A.,M.Ed.,M.Phil
ந.க.எண்.572/அ1/2024 நாள்.15.02.2024
---

பொருள்; சிறுபான்மையினர் நலம் – ஹஜ் புனித பயணம் – 2024 – வேலூர் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகம் – மாற்றுப்பணியில் சௌதி அரேபியாவில் தன்னார்வலர்களாக பணிபுரிய விருப்பமுள்ள பணியாளர்கள் விண்ணப்பம் கோருதல் – தொடர்பாக.

பார்வை; 1.தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செயலர்(ம)செயல் அலுவலர் அவர்களின் கடித எண்.316/HC/2024 நாள்.29.01.2024
2.வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண். ஆர்1/7583/2024 நாள்.12.02.2024
---

பார்வையில் காணும் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செயலர் (ம) செயல் அலுவலர் அவர்களின் கடிதத்தில், 2024–ஆம் ஆண்டிற்கான ஹஜ் புனிதபயணத்தில் மாற்றுப்பணியில் சௌதி அரேபியாவில் தன்னார்வாலர்களாக பணிபுரிய விருப்பமும் தகுதியும் உள்ள இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் www.hajcommittee.gov.in எனும் இணையதளத்தில் 15.02.2024–க்குள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் பொருள் தொடர்பாக தங்கள் பள்ளி / அலுவலகங்களில் பணிபுரியும் விருப்பமும், தகுதியுமுள்ள இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த அரசு பணியாளர்கள் முதற்கட்டமாக இணையதளத்தின் மூலமாக பதிவு செய்யவும், அவ்வாறு பதிவு செய்யப்பட்ட விவரங்களை பெற்று தொகுத்து தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் 19.02.2024–க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு; கடித நகல்

// ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்,

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகம், வேலூர்
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/ தொடக்கப் பள்ளிகள்/தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்
3. அனைத்து உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்